## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.STC 320/2022**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 10**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அமரேசன் | தொழில் | : அரசு பேருந்து நடத்துனர் |
| தந்தை பெயர் | : கோவிந்தசாமி | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

### முதல் விசாரணை

**1.** நான் அரசு பேருந்து நடத்துனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.08.2017 ந் தேதி செஞ்சியில் இருந்து மழவந்தாங்கள் சென்ற அரசு பேருந்து எண்.TN32 N2547 என்ற அரசு பேருந்தில் நான் நடத்துனராகவும், முருகன் என்பவர் ஓட்டுனராகவும் பணிபுரிந்தோம். அப்பொழுது பெருங்காப்பூர் காடு அருகே செல்லும்போது எதிரே வந்த 8ம் நெம்பர் அரசு பேருந்து வந்து மோதியதில் 8ம் நெம்பர் பேருந்து காட்டுக்குள் சென்று நின்றது. எங்கள் பஸ் ரோட்டிலேயே நின்றது. எனக்கு முட்டி, கால், கை ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. எங்கள் பஸ்ஸில் இருந்த 10,20 நபர்களுக்கு காயம் ஏற்பட்டுவிட்டது. காயம்பட்டவர்கள் செஞ்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்தோம். ஆஜர் எதிரிதான் 8 நெம்பர் பஸ்ஸை ஓட்டி வந்த அரசு பேருந்து ஓட்டுனர் ஆவார்.

### குறுக்குவிசாரணை:

2. எங்கள் பஸ்ஸில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் என்றால் 50, 60 நபர். எனது இருக்கை பஸ்ஸிற்கு பின்னால் என்றால் சரிதான். விபத்து நடந்த சமயத்தில் பஸ்ஸின் பின்பக்க மாக 4 சீட் தள்ளி டிக்கெட் போட்டுக்கொண்டிருந்தேன். நான் டிக்கெட் போடும்போது சில பயணிகள் நின்று கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகுதான் 8ம்நெம்பர் பஸ் மோதியது எனக்கு தெரியும் என்றால் ஆமாம். 8 நெம்பர் பஸ்ஸில் பயணம் செய்தவருக்கும் காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி தெரியவில்லை. காட்டுப்பகுதி சாலை குறுகலாக இருந்தது என்றால் சரிதான்.

யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் அது பற்றி தெரியவில்லை. விபத்துக்கு பின்னர் 8 நெம்பர் பேருந்து ரோட்டை விட்டு காட்டுக்குள் சென்றது என்றால் சரிதான். நாங்கள் சென்ற பேருந்து ரோட்டில் தான் இருந்தது என்றால் ஆமாம். விபத்து ஏற்பட்டதற்கு காரணமே நாங்கள் சென்ற பேருந்து ஓட்டுனர் கவனக்குறைவுதான் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.STC 320/2022**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20ம் தேதி வெள்ளிக் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 11**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பெருமாள் | தொழில் | : கூலி |
| தந்தை பெயர் | : பிச்சாண்டி | சமயம் | : |
| கிராமம் | : கெங்கவரம் | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 70 |

சாட்சியையும் எதிரியும் சத்தியமங்கலம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.செல்வமணி HC 2248 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் கெங்கவரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். 5 வருடத்திற்கு முன்பாக அரசு டவுன் வண்டியில் பாலப்பட்டுக்கு சென்றேன். அப்போது பெருங்காப்பூர் காட்டில் டவுன் வண்டியில் சென்றபோது எதிரே வந்த தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு தோள்பட்டை, இடுப்பு போன்ற இடங்களில் அடிப்பட்டது. செஞ்சி அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு சேர்ந்தோம். என்னுடன் 4 பேருக்கும் காயம்பட்டது.

**குறுக்குவிசாரணை:**

2. விபத்து எப்படி நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் அன்றையதினமே வந்து பஸ்ஸை பார்த்தார்கள்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.